# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சை 2020

ஆண்டு: 7 திகதி: 21.11.2020

நேரம்: 2½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. ச. பாலகங்காதரன்

மாணவர் பெயர்: ________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 15 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 30 | |
| வினா 5 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் பகுதியை வாசித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

## உடல் நலம் காக்க

அன்பு மாணவர்களே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கம். 'சுவரை வைத்துத்தான் சித்திரம் வரையவேண்டும்' என்பது சான்றோர் வாய்மொழி. அதுபோல உடல் நலமாக இருந்தால்தான் நாம் ஒழுங்காக வேலை செய்யமுடியும். நம் உடலைப் பாதுகாப்பது நம் முதற்கடமையாகும். மகிழ்வுடன் வாழவும், சரியாகச் சிந்திக்கவும், சீராகச் செயல்படவும் உடல் நலம் மிக மிக அவசியம். நீங்களும் நானும் உழைக்கின்றோம். அதே போல ஓய்வும் கொள்கின்றோம். நம்மில் பலர் ஓய்வு என்றால் உண்டு உறங்கி நேரத்தைக் கழிப்பது என்று எண்ணுகிறார்கள். அது மிகத்தவறு.

ஓய்வு என்பது உழைத்துக் களைத்திருக்கும் உடலுக்கும், உள்ளத்திற்கும் ஆறுதல் அளிப்பதேயாகும். அவ்வாறான ஆறுதலுக்கு நல்ல பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கிடைக்கும் ஓய்வு நேரத்தை நலம் தரும் வழியில் செலவழிக்க வேண்டும்.

நீங்கள் எவ்வாறான பொழுதுபோக்குகளை மேற்கொண்டால் உங்கள் ஓய்வு நேரம் சிறப்பாகக் கழியும் என்பதைப்பற்றி நான் இப்பொழுது கூற விரும்புகின்றேன். பொழுதுபோக்குகள் பல தரப்பட்டவை. தற்போது பலர் விடுமுறை நாள்களில் வெளிநாட்டுக்குச் சுற்றுலா செல்கின்றனர். வெளி நாட்டுச் சுற்றுலா பொது அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும். அது மனத்திற்கும் மகிழ்ச்சி அளிக்கின்றது. சிலர் ஓய்வு நேரத்தில் பொருள் ஈட்டுவதைப் பொழுதுபோக்காகக் கொண்டுள்ளனர். மலர் அலங்கரிப்பு, பூச்செடி வளர்த்தல், சிற்றுண்டி தயாரித்து விற்றல் போன்றவை அவற்றுள் சில. இவற்றின்வழி அவர்கள் லாபமடைவதோடு பிறருக்கும் நன்மை புரிகின்றனர்.

பெரும்பாலானோர் விரும்பிச் செய்யக் கூடிய எளிமையான பொழுதுபோக்குகளும் உள்ளன. அவற்றுள் ஓவியம் தீட்டுதல், அஞ்சல் தலை சேகரித்தல், நூல் சேகரித்தல், நாணயங்கள் சேகரித்தல் குறிப்பிடத்தக்கவை.

எல்லாவற்றிக்கும் மேலாக உடல்நலம் காக்கும் பொழுதுபோக்குகளை மேற்கொள்ளுவது சிறப்பாகும். விளையாட்டும் உடற்பயிற்சியும் உடலுக்குச் சுறுசுறுப்பை ஏற்படுத்தும். உடல் வலுப்பெறும். மனம் மகிழ்ச்சி அடையும். தோற்றத்தில் அழகு மிகும். நல்ல வழியில் பொழுதைக் கழித்தால் வாழ்க்கையும் மகிழ்ச்சியாக இருக்கும் என்று கூறி என் உரையை முடிக்கின்றேன்.

1.1 சுவரை வைத்துத்தான் சித்திரம் வரையவேண்டும் என்பதற்கு இங்கு கூறப்பட்டுள்ள பொருள் என்ன?

1.2 நமக்கு உடல்நலம் ஏன் மிக மிக அவசியம்?

1.3 ஓய்வு என்றால் என்ன? அதை எப்படிக் கழிக்க வேண்டும்?

1.4 நீங்கள் உங்கள் ஓய்வுநேரம் சிறப்பாக அமைய எவ்வாறான பொழுதுபோக்குகளை மேற்கொள்கிறீர்கள்?

1.5 விளையாட்டும், உடற்பயிற்சியும் உடல்நலத்திற்குப் போதுமா?
நீ என்ன நினைக்கிறாய்?

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஐந்து சொற்களுக்குக் குறையாமல் வாக்கியங்கள் எழுதுக.**

2.1 விளையாட்டு

______________________________

______________________________

2.2 மாலை நேரம்

______________________________

______________________________

2.3 திருக்குறள்

______________________________

______________________________

2.4 புதுமனை புகுவிழா

______________________________

______________________________

2.5 விஞ்ஞானிகள்

______________________________

______________________________

2.6 விலங்குகள் காப்பகம் (RSPCA)

______________________________

______________________________

2.7 சிபிச்சக்கரவர்த்தி

______________________________

______________________________

2.8 வாழைத்தண்டு

______________________________

______________________________

2.9 நாய்க்குட்டி

______________________________________________

______________________________________________

2.10 குட்டிக்கதை

______________________________________________

______________________________________________

- BLANK PAGE -

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் வாக்கியங்களை இரு வாக்கியங்களாக பிரித்து எழுதுக.**

3.1 மாலா மாடிப்படியிலிருந்து கீழே இறங்கியபோது கால்தவறிக் கீழே விழுந்தாள்.

1.________________________________________________________________________________

2.________________________________________________________________________________

3.2 என் அண்டைவீட்டார் தங்கள் வீட்டை காலி செய்துவிட்டு, பின்னர் வேறு இடத்திற்குக் குடியேறிவிட்டனர்.

1.________________________________________________________________________________

2.________________________________________________________________________________

3.3 அம்மா நாளும் தவறாமல் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி வந்ததால் செடிகள் நிறையக் காய்த்தன.

1.________________________________________________________________________________

2.________________________________________________________________________________

3.4 மேளதாளம் முழங்க மணமகன் மணமகள் கழுத்தில் தாலியைக் கட்டியபோது, மக்கள் மலர்தூவி வாழ்த்தினர்.

1.________________________________________________________________________________

2.________________________________________________________________________________

3.5 காந்திஅடிகள் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்ததனால் உண்மை பேசுவதையே இறுதிவரை கடைப்பிடித்தார்.

1.________________________________________________________________________________

2.________________________________________________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 30 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. நான் கொண்டாடிய தீபாவளித் திருநாள்
2. என்னால் மறக்க முடியாத கதை
3. தமிழின் வளர்ச்சிக்குத் தொழில்நுட்ப வளர்ச்சி எவ்வாறு உதவுகின்றது

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் கடிதத்தில் ஒன்றைத் தெரிவுசெய்து 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.**

1. உனது பிறந்தநாளுக்கு உனது பெற்றோர் ஒரு வளர்ப்புப் பிராணியைப் பரிசாகத் தந்தனர். அது என்ன பிராணி? அந்தப்பிராணியின் சிறப்பியல்புகள் என்ன? அதை எவ்வாறு கவனித்து வளர்க்கின்றாய் என்பது பற்றி விபரித்து உனது சிநேகிதன் அல்லது சிநேகிதிக்கு கடிதம் எழுதுக
2. கோவிட் 19 என்னும் கிருமித்தாக்கம் காரணமாக பாடசாலைக்கோ, வெளியிலோ செல்லாமல் வீட்டிலே முடங்கியிருந்த பொழுது என்ன செய்தீர்கள் என்பது பற்றி உங்கள் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக